விடுதலைப் போராட்ட வீரர் ஜீவானந்தம் பேரனுக்கு அரசுப் பணி

முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார்

பொதுவுடைமை சிந்தனையாளரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஜீவானந்தத்தின் பேரன் ம.ஜீவானந்தத்துக்கு அரசுப் பணிக்கான உத்தரவை சென்னை தலைமை செயலகத்தில் திங்கள்கிழமை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்டோர்.

சென்னை, மார்ச் 14: விடுதலைப் போராட்ட வீரர் மறைந்த ஜீவானந்தம் பேரனுக்கு அரசுப் பணிக்கான உத்தரவை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

பொதுவுடைமை சிந்தனையாளரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஜீவானந்தத்தின் பேரன் ம.ஜீவானந்த். மாற்றுத் திறனாளியான அவருக்கு தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் சிறப்பு நேர்வாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை நேரில் வழங்கினார். மேலும், வட்டாரக்கல்வி அலுவலர் உள்ளிட்ட பணியிடங்களில் காலியாகவுள்ள இடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி 95 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் நான்கு பேருக்கு பணிநியமன உத்தரவுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார்.

திறன்மேம்பாடு– விளையாட்டு: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களிலும், விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்திலும் ரூ.84.57 கோடி செலவில் புதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வசதிகளை காணொலி காட்சி வழியாக தலைமைச் செயலகத்தில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தேசிய அளவில் நடைபெறும் அனைத்து மாநிலங்களுக்கான திறன் போட்டிகள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும். அந்த வகையில், கடந்த ஆண்டுக்கான இறுதிப் போட்டிகள் ஜனவரியில் நடத்தப்பட்டன. இதில், தமிழகத்துக்கு 23 பதக்கங்கள் கிடைத்தன. இதுபோன்று அதிகளவில் பதக்கங்கள் கிடைப்பது இதுவே முதல் முறையாகும்.

தங்கப் பதக்கம் வென்ற ஏ.அனுஸ்ரீ, சுபாசிஸ் பால் ஆகியோருக்கு தலா ரூ.1 லட்சமும், வெள்ளிப் பதக்கம் வென்ற எம்.காளிராஜ், சி.கார்த்தி, எஸ்.தாட்சாயனி, பி.வி. சரஸ்வதி, ஆர்.ஜெ.பிரகதீஸ்வரன், எஸ். விஷ்ணுபிரியா ஆகியோருக்கு தலா ரூ.50 ஆயிரமும், வெண்கலம் வென்ற எம்.ஜெ. அபர்ணா, பி.லோகேஷ், கே.அஜய்பிரசாத், வி.லோகேஷ், எஸ்.ஜெகன், என்.ஆர். பிரகதீஷ், ஆர்.தினேஷ் ஆகியோருக்கு தலா ரூ.25 ஆயிரத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள், தலைமைச் செயலர் வெ.இறையன்பு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சீர்காழி அருகே

கடன் தொல்லையால் 2 குழந்தைகளை கொன்று தாய் தற்கொலை

சீர்காழி, மார்ச் 14: சீர்காழியில் கணவன் கடன் பிரச்னையில் சிக்கியதால் மனமுடைந்த மனைவி, தனது 2 குழந்தைகளையும் கொன்று, தானும் தற்கொலை செய்துகொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியை அடுத்த நாங்கூர் கன்னிகோயில் தெருவைச் சேர்ந்தவர் காக்கலிங்கம் மகன் கார்த்திக் (32). இவரும், தென்னலக்குடி கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் மகள் பாரதியும் (27) கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்துகொண்டனராம். இவர்களுக்கு கௌசிக் என்ற மூன்றரை வயது மகனும், பவதாரணி என்ற 8 மாத பெண் குழந்தையும் இருந்தனர்.

இவர்கள் இருவரும் தற்போது சீர்காழி தென்பாதியிலுள்ள என்எஸ்பி நகரில் உள்ள ஒரு வாடகை குடியிருப்பில் வசித்து வந்தனர். லாரி ஓட்டுநரான கார்த்திக், தொழில்ரீதியாக பல மாதங்கள் வெளியூர், வெளிமாநிலங்களுக்கு சென்றுவிடுவது வழக்கம். இவர் பலரிடம் கடன் வாங்கியுள்ளாராம். சொந்தமாக இடம் வாங்கி, வீடுகட்ட வேண்டும் என பாரதி, தனது கணவரிடம் கூறிவந்த நிலையில், கார்த்திக் வெளியிடங்களில் கடன் அதிகம் வாங்கிவைத்துள்ளதால், பாரதி மனவேதனையில் இருந்துள்ளார்.

இந்நிலையில், திங்கள்கிழமை மாலை கார்த்திக் வெளியூருக்கு சென்றிருந்த நிலையில், தனது குழந்தைகள் இருவரையும் ஜன்னலில் தூக்கிலிட்டு கொன்றுவிட்டு, தானும் மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதற்கு முன்னதாக பாரதி, தனது தாய் சித்ராவிற்கு தொலைபேசியில் பேசியுள்ளார்.

மகள் சோகமாக பேசுவதை கேட்ட சித்ரா, உடனடியாக வந்து பார்த்தபோது, பாரதி வசித்த வீட்டின் கதவு உள்பக்கமாக தாழிடப்பட்டிருந்தது. இதையடுத்து, அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து பார்த்தபோது, பாரதியும், அவரது 2 குழந்தைகளும் தூக்கில் சடலமாக தொங்கியதை கண்டு அதிர்ச்சியடைந்து கதறி அழுதார்.

இதுகுறித்து தகவல் அறிந்த சீர்காழி போலீஸார் அங்குச் சென்று 3 பேரின் உடலையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். விசாரணையின்போது பாரதி எழுதிவைத்திருந்த கடிதத்தை போலீஸார் கைப்பற்றியுள்ளனர். அதில், எங்கள் சாவுக்கு யாரும் காரணம் கிடையாது. நான் பெற்றோரை விட்டு வந்தது தவறு. என் கணவருக்கு கடன் அதிகமாக உள்ளது. எதையும் எதிர்கொள்ளும் தைரியம் எனக்கு இல்லை என்று எழுதப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை எஸ்பி சுகுணா சிங், சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டுள்ளார்.

சென்னை தரமணியில் ரூ.5 ஆயிரம் கோடி முதலீட்டில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, மார்ச் 14: சென்னையில் ரூ.5 ஆயிரம் கோடி முதலீட்டில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை அடிக்கல் நாட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

சென்னை தரமணியில் டிஎல்எப், டௌன்டவுனில் ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் நிறுவனம் மிகப்பெரிய உலகளாவிய வளாகத்தை அமைக்க உள்ளது.

இந்த வளாகத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். டிட்கோவின் ரூ.50 கோடி முதலீட்டு பங்குடன் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தில், 27 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. ரூ.5 ஆயிரம் கோடி முதலீட்டைக் கொண்டிருக்கும் இந்தத் திட்டத்தில் டிஎல்எப் நிறுவனம் தனது முதலீட்டை படிப்படியாக அதிகரிக்கும். புதிதாக அமைக்கப்பட உள்ள வளாகத்தில் பணியாளர்களுக்கென நலவாழ்வு மையம், உடற்பயிற்சி நிலையம், சிற்றுண்டி உணவகங்கள், குழந்தைகள் காப்பகம் போன்ற பல்வேறு வசதிகளுடன் வடிவமைக்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலமாக சுமார் 70 ஆயிரத்துக்கும் அதிகமான தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

இந்தநிகழ்ச்சியில், அமைச்சர்கள் க.பொன்முடி, தங்கம் தென்னரசு, சட்டப் பேரவை உறுப்பினர் ஹசன் மௌலானா, தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், டிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பங்கஜ் குமார் பன்சால் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கரோனா சிகிச்சையில் 1,054 பேர்

சென்னை, மார்ச் 14: தமிழகத்தில் கரோனா சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 1,054–ஆகக் குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது.

அதேபோன்று, தமிழகத்தில் புதிதாக கரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையும் 86–ஆக குறைந்துள்ளது.

அதில் அதிகபட்சமாக சென்னையில் 33 பேரும், அதற்கு அடுத்தபடியாக கோவையில் 11 பேரும் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மற்றொருபுறம் மேலும் 204 பேர் கரோனாவிலிருந்து விடுபட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 34 லட்சத்து12,918–ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் ஒருவர் பலியாகியதை அடுத்து நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 38,024–ஆக அதிகரித்துள்ளது.

காலமானார்

மீனா சுவாமிநாதன்

சென்னை, மார்ச் 14: வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் மனைவியும், சமூக செயற்பாட்டாளருமான மீனா சுவாமிநாதன் (88) உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் திங்கள்கிழமை காலமானார்.

கல்வியாளரும், குழந்தைகளின் தொடக்கக் கல்வி மேம்பாட்டுக்கான செயல்பாடுகளுக்காக பரவலாக அறியப்பட்டவருமான மீனா சுவாமிநாதன் மத்திய வாரியங்களில் முக்கியப் பொறுப்புகளை வகித்தவர். மத்திய கல்வி ஆலோசனை வாரியத்தின் தலைவராக 1970–ஆம் ஆண்டு பொறுப்பு வகித்தார். மீனா சுவாமிநாதன் தலைமையிலான குழு அளித்த அறிக்கையில் அடிப்படையில்தான் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1975–இல் அமலாக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு கற்பித்தல் தொடர்பான பயிற்சிகளை அளித்தவர். அவர்களுக்கான பிரத்யேக கையேடுகளை உருவாக்கினார். தில்லியில் உள்ள மத்திய பெண்களுக்கான கல்வி அமைப்பை நிறுவியவர். பாலியல் சமத்துவம் தொடர்பான ஆய்வுகள், நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுத்தவர் ஆவர்.

மீனா சுவாமிநாதனுக்கு கணவர் எம்.எஸ்.சுவாமிநாதன், உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன், மதுரா சுவாமிநாதன், நித்யா ராவ் ஆகிய மூன்று மகள்கள் உள்ளனர். மீனா சுவாமிநாதனின் இறுதிச் சடங்குகள் சென்னை பெசன்ட் நகரில் உள்ள மயானத்தில் திங்கள்கிழமை நடைபெற்றன.

இரங்கல்

ஆளுநர் ஆர்.என்.ரவி: ஒரு சிறந்த ஆசிரியர், கல்வியாளர், சிறந்த எழுத்தாளர், பாலின சமத்துவம் மற்றும் பெண் குழந்தை மேம்பாட்டுக்கான அவரது பங்களிப்புக்காக எப்போதும் நினைவு கூரப்படுவார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்: வேளாண் ஆய்வறிஞர் எம்.எஸ்.சுவாமிநாதனின் வாழ்க்கைத் துணைவியார் மீனா சுவாமிநாதன் மறைவுச் செய்தியறிந்து வருந்தினேன். சிறந்த கல்வியாளராகவும் பன்முகத்தன்மையாளராகவும் விளங்கிய அவரது மறைவு ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவால் வாடும் எம்.எஸ்.சுவாமிநாதன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் 18–இல் திமுக எம்.எல்.ஏ.,க்கள் கூட்டம்

சென்னை, மார்ச் 14: திமுக சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டம், வரும் 18–இல் நடைபெறும் என்று அரசு தலைமை கொறடா கோவி. செழியன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:–

திமுக சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டம், கட்சியின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் வரும் 18–ஆம் தேதி மாலை 6 மணிக்கு நடைபெறும். முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென அரசு தலைமை கொறடா கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

படிவம் எண் [illegible]

(நிறுவனங்கள் (கலைத்தல்) விதிகள் 2020ன் விதி 7க்கிணங்க)

மாண்பமை நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம் சென்னை அமர்வு, சென்னை

நிறுவன மனு எண். [illegible] (சென்னை) 2021

நிறுவனங்கள் சட்டம் பிரிவு 271 முதல் 273 வரை மற்றும் நிறுவனங்கள் சட்டம் 2013 ன் கீழான பொருந்தத்தக்க இதர ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப்பாயம் விதிகள் 2016 - விவகாரத்தில்

மெகா ட்ரேட் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்., (CIN : U74999TN1997PTC038834 உடன் நிறுவனங்கள் சட்டம் 1956 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் இணைவு செய்யப்பட்டது) விவகாரத்தில்;

M/s. மெகா ட்ரேட் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்., (பதிவு எண். CIN : U74999TN1997PTC038834)ஆல் மாண்பமை தீர்ப்பாயத்தால் நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 271(a) முதல் 272 வரையிலான ஏற்பாடுகளின் கீழ் நிறுவனத்தை கலைக்க, நிறுவனங்கள் சட்டம் 2013 ன் பிரிவு 271(a)ன் கீழ் 2021 செம்டம்பர் 09 தேதியன்று சிறப்பு தீர்மானம் போடப்பட்டு அதன் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விவகாரத்தில்...

மெகா ட்ரேட் இம்பெக்ஸ் பிரைவேட் லிமிடெட்., என்ற பங்குகளால் வரையறுக்கப்பட்டு நிறுவனங்கள் சட்டம் 1956 ன் கீழ் இணைவு செய்யப்பட்டு வளாகம் எண். 11, (புதிய எண். 23) லிங்கி செட்டி தெரு, மண்ணடி, சென்னை, தமிழ்நாடு-600001 இந்தியா (பதிவு எண். CIN : U74999TN1997PTC038834)

... மனுதாரர் நிறுவனம்

மனுவின் விளம்பரம்

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், மேற்காண் பெயருடைய நிறுவனத்தை மாண்பமை சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வால் கலைப்பதற்கான மனு, மாண்பமை சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வால் 02.03.2022 அன்று மாண்பமை சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு முன்னிலையில் மேற்சொன்ன நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டது., மேலும் மேற்சொன்ன மனுவானது மாண்பமை தீர்ப்பாயத்தால் 2022 ஏப்ரல் 20 அன்று விசாரிக்கப்படவுள்ளது.

மேற்சொன்ன மனுவின் மீதான ஆணையினை வழங்க ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் இந்நிறுவனத்தில் பங்களிப்பு உள்ளவர்கள் அல்லது இதர நபர்கள் அதனை மனுதாரருக்கு அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு அவரது அறிவிப்புக்கான நோக்கத்துடன் அவரலோ அல்லது அவரது பிரதிநிதியாலோ கையொப்பமிட்டு அவரது பெயர் மற்றும் முகவரியுடன் மனுதாரரை அல்லது அவரது பிரதிநிதிக்கு, மனு விசாரிக்கப்படுவதற்குகாக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு குறைந்த பட்சம் 5 நாட்களுக்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புவதோடு, விசாரணையில் நேரடியாகவோ அல்லது அவரது பிரதிநிதி மூலமாகவோ ஆஜராக வேண்டும்.

அனைத்து கடனளித்தவர்களுக்கோ அல்லது பங்களிப்புள்ளவருக்கோ, உரிய தொகையை செலுத்தினால், கீழ்க்கையொப்பமிட்ட நபரால் மனுவின் நகல் வழங்கப்படும். இம்மனுவை எதிர்க்கும் நோக்கில் ஏதேனும் பிரமாண வாக்குமூலம் இருப்பின் அதனையும், மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு விசாரணைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு குறைந்த பட்சம் ஐந்து நாட்களுக்கு முன்பு வழங்கப்பட்ட நகலுடன் சேர்த்து தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இடம்:சென்னை
தேதி:15.03.2022

மனுதாரரின் பிரதிநிதி
மெகா ட்ரேட் இம்பெக்ஸ்
பிரைவேட் லிமிடெட்

ஒப்பம்/-
அனில் ஷர்மா, அதிகாரப்பூர்வ அலுவலர்,
முகவரி-35, சுரஜ் நகர், சவான் ஜெயின் கிராணா
ஸ்டோர் அருகில், கர்ஜ்ரானா, இண்டோர்-452016

படிவம் எண் RSC -4

[விதி 3(3)-க்கு இணங்க]

[தேசிய கம்பெனி சட்டத் தீர்ப்பயம் அமர்வு, சென்னை முன்னிலையில் கம்பெனி விண்ணப்பம் NO.CA/759/2020

M/s.ITI ஹோல்டிங்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட் பிரைவேட் லிமிடெட் (CIN: U65921TN1994PTC027020) பதிவு அலுவலகம் எண்.14, முதல் தளம், ஹாடோஸ் சாலை, 1வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 600006.

-- விண்ணப்பதாரர்.

அறிவிப்பு வெளியிடுதல்

இதன் முலம் அறிவிப்பது என்னவென்றால்; பின்வருமாறு மேற்கண்ட நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை ரூ 3,75,00,000/- லிருந்து ரூ 37,50,000/- ஆகக் குறைப்பதை உறுதி செய்வதற்காக விண்ணப்பம் ஒன்று 2 மார்ச் 2022 அன்று மாண்புமிகு தீர்ப்பாயம் சென்னை அமர்வு முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடன் வழங்கியவர்களுக்கு தனித்தனியே நோட்டீசுகள் அளிக்கப்பட்டுள்ளன. கடன் வழங்கியோர் பட்டியல், கம்பெனியால் 08 மார்ச் 2022 அன்று தயாரிக்கப்பட்டு அவை கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 11:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை பார்வையிடுவதற்கு (பார்வையிடும் நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை) கிடைக்கும்.

மேற்படி விண்ணப்பத்திற்கு அல்லது கடன் வழங்கியோர் பட்டியல் விவரங்கள் தொடர்பாக கம்பெனிக்கு கடன் வழங்கிய எந்தவொரு நபருக்கும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் அதனை அவர்கள் தங்களது பெயர் முகவரியுடன் அல்லது தங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியின் பெயர் முகவரியுடன் (உரிய சான்றாதாரங்களுடன் இணைக்கப்பட்டு) இந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 3மாத காலத்திற்குள் கம்பெனியின்அதிகாரப்பூர்வ பிரதிநிதி கீழே கையொப்பமிட்டுள்ளவரான A .ரமேஷ் குமார், R K லீகல், ANM நெஸ்ட், மனை எண்.46, வள்ளல் அதியமான் தெரு, பாகிரதி நகர், ராம் நகர் வடக்கு, மடிப்பாக்கம், சென்னை - 600 091 அவர்களுக்கு அனுப்ப வேண்டியது.

அவ்வாறு மேற்குறித்த காலத்திற்குள் ஆட்சேபணை எதுவும் வரப்பெறா விட்டால் கம்பெனியின் பங்கு மூலதனத்தை குறைப்பதற்கு மேற்படி கடன் வழங்கியோர் பட்டியலில் உள்ள விவரங்கள் மேற்படி விண்ணப்பத்தின் கீழ் எடுக்கப்படும் அனைத்து நடைமுறைகளும் சரியானதே என்று கருதப்படும்.

மேற்படி விண்ணப்பத்தின் விசாரணை இத்தீர்ப்பாயத்தில் 15 ஜூன் 2022 அன்று நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடன் வழங்கியோர் எவரும் மேற்படி விசாரணையில் பங்கேற்க விரும்பினால் அவர்கள் தங்களது ஆட்சேபணைகளுடன், எதுவும் இருப்பின், வந்து பங்கேற்கலாம்.

M/s.ITI ஹோல்டிங்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட் பிரைவேட் லிமிடெட்க்காக

A.ரமேஷ் குமார்
அட்வகேட்

தேதி: -- மார்ச் 2022
இடம்:சென்னை

கனம் சார் ஆட்சியர் அவர்கள், மேட்டூர்
189/2022

வெங்கடாசலம்
த/பெ. ரங்கப்பன்
க.எண்.1/184, நத்தியாம்பட்டி காட்டுவளவு,
மேட்டுகாடு,
சின்னப்பம்பட்டி அஞ்சல்,
பாப்பம்பாடி கிராமம்,
ஓமலூர் தாலுக்கா,
சேலம் மாவட்டம் – மனுதாரர்

–VS–

திரு. வட்டாட்சியர் அவர்கள்
ஓமலூர் – எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் வெங்கடாசலம் தனது தந்தை ரங்கப்பன் கடந்த **20.09.1995** அன்று காலமாகிவிட்டார். அதனை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்ய தவறிவிட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்ய வேண்டி விண்ணப்பித்து உள்ளார். மேற்படி இறப்பு பதிவு குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இன்று முதல் **14** நாட்களுக்குள் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமாகவோ தங்களது ஆட்சேபனையை மேற்படி கனம் சார் ஆட்சியர், மேட்டூர் அவர்களிடம் தெரிவிக்க வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ மேற்படி கோர்ட்டார் உத்தரவுப்படி /

H.MUNAVARKHAN,B.A.,B.L.,
ADVOCATE, E.NO. : MS.1278/1993
C7, RAJARAM NAGAR,
SALEM-636007
சேலம் Cell : 93455 84257

யூனியன் பாங்க் ஆப் இந்தியா, குமாரபாளையம் கிளை

APPENDIX- II-A [See provison to rule 6 (2)]

3/11, என்.ஹெச்-47, சேலம் மெயின் ரோடு, வளையக்காரனூர், குமாரபாளையம்-638183

போன்: 04288-294005, 294006, 98942 18630

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 (**Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002**) மற்றும் பிணைக்காப்பு நிதிச்சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002 (**Security Interest ((Enforcement) Rules, 2002**)-ன் கீழ் உள்ள விதி எண்.8(6)-ன் நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு. பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர் மற்றும் பிணையாளர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் வங்கியில் அடமானம் கொடுக்கப்பட்டதும்/ஈடுசெய்யப்பட்டதும், **யூனியன் வங்கி, குமாரபாளையம் கிளையின்** அதிகாரபூர்வ அதிகாரியால் ஆக்கபூர்வமாக கீழ்கண்ட தேதியில் சுவாதீனம் (Constructive Possession) ஆக்கப்பட்டதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்ட **கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானம்வைத்தவர்** ஆகியோரிடமிருந்து **யூனியன் வங்கி, குமாரபாளையம் கிளைக்கு** வந்து சேரவேண்டிய கடன்பாக்கித்தொகை மற்றும் செலவினங்களுடன் சேர்த்து தொகையை வசூலிக்கும் பொருட்டு **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்கிற அடிப்படையில் **30.03.2022 தேதியில்** விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்த மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

ஏலத்தேதி மற்றும் நேரம்	30.03.2022 (புதன்கிழமை) மாலை 03.00 முதல் 05.00 மணிக்குள் மேலும் 10 நிமிடம் நீட்டிப்பு, அதாவது ஏலம் விடப்பட்ட பிறகு 10 நிமிடம் நீட்டிப்பு, அனைத்து ஏலதாரர்கள் ஏலத் தொகை கூறிய பின் 10 நிமிட இடைவெளியில் ஏலம் உறுதிசெய்யப்படும்.
ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பிக்க கடைசி தேதி	30.03.2022 (புதன்கிழமை) காலை 11.000 மணிக்கு முன்
ஏலம் கூற உயர்த்தும் தொகை	ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானம்வைத்தவர் பெயர் : M/s ஏ.எஸ்.ஆர். எக்ஸ்போர்ட் மில்ஸ், உரிமையாளர்: திரு. ஏ.சுந்தரன், த/பெ ஆதியண்ணன், எண்.70–சி, பிரிவு ரோடு, மேக்காடு, சங்ககிரி மேற்கு, சேலம் மாவட்டம்-637303, **திருமதி என்.கிர்த்திகா, க/பெ திரு.சுந்தரன்,** எண்.70–டி, கோட்டபாளையம், சங்ககிரி மேற்கு, சேலம் மாவட்டம்-637301.

சுவாதீன அறிவிப்பு தேதி : 16.09.2021

அசையா சொத்துக்கள் விவரம் : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சங்ககிரி துணை பதிவு மாவட்டம், சங்ககிரி தாலுகா, சங்ககிரி கிராமம், ரீ.ச.எண்.60/1பி4ஏ, புஞ்சை ஏக்கர் 3.90 இதன் எல்லைகள் வருமாறு : கிழக்கில் : கவிதா, பாலு மற்றும் ராமசாமி நிலங்கள், மேற்கில் : ரீ.ச.எண்.60/1பிஏ ராஜாவின் நிலம், வடக்கில் : தாமோதரன் மற்றும் செங்கோடன் நிலம், தெற்கில் : சேலம் - ஈரோடு செல்லும் ரோடு, இதன் அளவுகள் புஞ்சை ஏக்கர் 3.90, நிலம் முழுவதும் 3 குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் அனைத்து பொதுவான நடைபாதை, வண்டிபாதை மற்றும் அனைத்து பாத்திய உரிமைகளும் அடங்கும். மேற்குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளர் திரு. ஏ.சுந்தரேன் த/பெ ஆதியண்ணன்.

கடன்பாக்கி தொகை மற்றும் வட்டி : 31.12.2017 வரை நிலுவை தொகை ரூ.3,42,91,311.58 (மூன்று கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சத்து தொண்ணூற்றி ஒன்றாயிரத்து முன்னூற்றி பதினொன்று ரூபாய் மற்றும் ஐம்பத்தி எட்டு பைசா மட்டும்) + 01.01.2018 முதல் வட்டி மற்றும் செலவினங்கள், கோரிக்கை அறிவிப்பு தேதி : 22.03.2021. சொத்தின் மதிப்பு : ரூ.6,12,00,000 (ரூபாய் ஆறு கோடியே பனிரெண்டு இலட்சம் மட்டும்). முன்வைப்பு தொகை (EMD) : ரூ.61,20,000 (ரூபாய் அறுபத்தி ஒன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்).

வில்லங்க சான்றிதழ்படி வில்லங்கம் இல்லை. மேலும் இந்த ஏல அறிவிப்பு மற்றும் விதிமுறைகள் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள யூனியன் பாங்க் ஆப் இந்தியாவின் இணையதள முகவரியான **www.unionbankofindia.com** பார்த்து தெரிந்து கொள்ளவும்.

தேதி : 11.03.2022
இடம் : குமாரபாளையம்

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, யூனியன்பாங்க் ஆப் இந்தியா, குமாரபாளையம்

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் – 27 BKC, C–27, G–பிளாக், பந்தரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்தரா (கிழக்கு), மும்பை – 400 051.
கிளை அலுவலகம் – கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்., 5–330, சோனியா ப்ளாஸா, முதல் தளம், ஸ்டேட் பேங்க் காலனி, சேலம் – 636 004

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) – க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 2012.2020 அன்று இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்து, 28.02.2022 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை **ரூ. 2,45,46,853/– (ரூபாய். இரண்டு கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து எட்நூற்று ஐம்பத்து மூன்று மட்டும்)** மற்றும் 01.03.2022 முதல் மேற்கொண்டு வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை **M/s. SKS ட்ரேடிங் கம்பெனி, நிர்வாக பங்குதாரர் திரு.K. சுப்ரமணியம் மற்றும் அதன் பங்குதாரர்கள், கூட்டு கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் திரு. K. சுப்ரமணியம், திருமதி. S. சரஸ்வதி, திருமதி. K. செம்பாயி அம்மாள்.,** ஆகியோரிடமிருந்து வசூலிப்பதற்காக, **"இருக்கின்ற இடத்தில்"** மற்றும் **"இருக்கின்ற நிலையில்"** மற்றும் **"திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில் மின்னணு ஏல முறையில் **2022 மார்ச் 30 ம் தேதியன்று** விற்பனை செய்யப்படவுள்ளன. சொத்துக்களின் விபரங்கள், அடிப்படை விலை (இவ்விலைக்கு குறைவாக சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது) மற்றும் டேவணித்தொகை உள்ளிட்ட விபரங்களாவன இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

லாட். எண்	விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரங்கள்	அடிப்படை விலை (ரூபாயில்)	டேவணித் தொகை
1	**சொத்து எண். 1 திருமதி. S சரஸ்வதிக்கு சொந்தமான சொத்து** – நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், எண். 2 சார் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுக்கா, கொண்டிசெட்டிப்பட்டி கிராமம், சர்வே எண். 25/4 ல் அமையப்பெற்ற 0.44 ஏக்கர் மற்றும் சர்வே எண். 25/7 ல் அமையப்பெற்ற 0.41 ஏக்கர் என மொத்தம் 0.85 ஏக்கர்., இதில் உள்ள 2750 சதுர அடி பரப்பளவு கொண்ட விவசாயமற்ற நிலம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இது பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் அமையப்பெற்றது. வருவாய் ஆவணத்தின் படி, மேற்சொன்ன இடமானது புதிய உட்பிரிவு சர்வே எண்கள். 25/4–A & 25/7 லும், பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்கள். 727/1994, 1687/1981 மற்றும் 1017/1980 ன் படி இவ்விடமானது நாமக்கல் தாலுக்கா, கொண்டிசெட்டிபட்டி கிராமம், சர்வே எண்கள். 25/4, 25/7 ல் 2750 சதுர அடி பரப்பளவுடன் ப்ளாட் எண்கள். 16 மற்றும் 17 யைக்கொண்டு அமைந்துள்ளது. 2750 சதுர அடி பரப்புக்கான எல்லைகளாவன – திரு. காளியண்ண கவுண்டர் மற்றும் பிறருக்கு சொந்தமான காலி இடம், திரு. ரங்கனின் காலி இடம் ஆகியவற்றுக்கு – வடக்கு, 20 அடி அகல கிழமேல் பொது சாலைக்கு – தெற்கு திரு. ரங்கசாமியின் காலி இடத்துக்கு – கிழக்கு, திரு. காளியண்ண கவுண்டர் மற்றும் பிறருக்கு சொந்தமான காலி இடம், 10 அடி அகல தென்வடல் பொது சாலைக்கு – வடக்கு. 2750 சதுர அடி பரப்புக்கான அளவீடுகளாவன – கிழமேல் வடபுறம் – 54 அடி., கிழமேல் தென்புறம் – 56 அடி., தென்வடல் கிழபுறம் – 50 அடி., தென்வடல் மேற்கு புறம் – 50 அடி., மற்றும் அதில் உள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் நிலத்துடன் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தற்போது அல்லது வருங்காலத்தில் அவ்வப்போது / அந்தந்த அடமான தேதிக்கு பிறகு அமைக்கப்பட்ட / அமைக்கப்படவுள்ள அனைத்து கட்டமைப்புக்கள் மற்றும் நிலத்துடன் இணைக்கப்பட்ட ஆலை மற்றும் இயந்திரங்கள் மற்றும் இச்சொத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து வழித்தட / மாமூல் உரிமைகள் ஆகியன.	ரூ. 77,00,000/–	அடிப்படை விலையில் 10%

மின்னணு ஏலம் மூலம் அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன –
சொத்துக்கள் ஆய்வு – விருப்பமுள்ள நபர்கள் சொத்துக்களை 29.03.2022 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை ஆய்வு செய்து கொள்ளலாம்.
டேவணித்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி & நேரம் – 29.03.2022 மாலை 05.00 மணி வரை.

1. ஏல விற்பனை "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" மூலம் KMBL ன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரரான அஹமதாபாத், குஜராத் – 380 006 ல் அலுவலகம் கொண்ட M/s ஆக்ஷன் டைகர், உதவி எண்கள். திரு. ப்ரவீன் குமார் அவர்களை 7961200515 / 9722778828 மற்றும் உதவிக்கான மின்னஞ்சல் முகவரி sales@auctiontiger.net வலைதளம் – www.auctiontiger.net மூலம் நடைபெறும்.
2. ஏல விற்பனை 2022 மார்ச் 30 ம் தேதியன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை., முடிவுறு நேரத்திற்கு கடைசி ஐந்து நிமிடத்தில் விலைகோரல் வைக்கப்படும் பட்சத்தில், தன்னியல்பான 5 நிமிடம் கால நீட்டிப்புடன் நடைபெறும்.
3. சொத்துக்கள் ஆய்வு உள்ளிட்ட ஏலத்திற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் இதர மேல் விபரங்களுக்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் கோட்டக்கின் வலைதளம் அல்லது ஆக்ஷன் டைகரின் வலைதளத்தை பார்க்கவும் மேலும், திரு. பாலமுருகன் அவர்களை தொலைபேசி எண். 8248222900 அல்லது திரு. ஸ்ரீதரா S., தொலைபேசி எண். 9916165915 அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 15.03.2022
இடம் : சேலம்

(அதிகாரப்பூர்வ அலுவலர்)
கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் – 27 BKC, C–27, G–பிளாக், பந்தரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்தரா (கிழக்கு), மும்பை – 400 051.
கிளை அலுவலகம் – கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட்., 5–330, சோனியா ப்ளாஸா, முதல் தளம், ஸ்டேட் பேங்க் காலனி, சேலம் – 636 004

விரைவு தபால் / தூதஞ்சல் மூலம்
விற்பனை அறிவிப்பு

தேதி : 14 மார்ச் 2022

பெறுனர் –
1) M/s. SKS ட்ரேடிங் கம்பெனி, நிர்வாக பங்குதாரர் திரு.K. சுப்ரமணியம், வீட்டு எண். 89/1, VRR காம்ப்ளக்ஸ், S.P. புதூர் மெயின் ரோடு, நாமக்கல்–637001 தமிழ்நாடு
2) திரு. K. சுப்ரமணியம், (ஜாமீன்தாரர்) குடியிருப்பு முகவரி – வீட்டு எண். பழையது 2/10, புதிய எண். 2/3, சங்கரபாளையம், குமாரிபாளையம், நாமக்கல் – 637 015
3) திருமதி. S. சரஸ்வதி (ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்) க/பெ. திரு. K. சுப்ரமணியம், குடியிருப்பு முகவரி – வீட்டு எண். பழையது 2/10, புதிய எண். 2/3, சங்கரபாளையம், குமாரிபாளையம், நாமக்கல் – 637 015
4) திருமதி. K. செம்பாயி அம்மாள்., (ஜாமீன்தாரர் – காலமாகி விட்டார்., அதனால் அவரது சட்டரீதியான வாரிசுகள் மூலம்) குடியிருப்பு முகவரி – வீட்டு எண். பழையது 2/10, புதிய எண். 2/3, சங்கரபாளையம், குமாரிபாளையம், நாமக்கல் – 637 015

அய்யா / அம்மையீர் !

பொருள் – பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 (இனிமேற்கொண்டு "'சட்டம்" என்றே அழைக்கப்படும்) – உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 (இனிமேற்கொண்டு "'விதிகள்" என்றே அழைக்கப்படும்) ன் கீழான விற்பனை அறிவிப்பு

1). இதன் கீழ்க்குறிப்பிட்ட அசையா சொத்தானது, **M/s. SKS ட்ரேடிங் கம்பெனி, மற்றும் பிறர் பெற்ற கடன் வசதிக்காக** கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் – பெயருக்கு அடமானம் செய்யப்பட்டுள்ளது.

2). இதன் கீழ்க்குறிப்பிட்ட அசையா சொத்துக்களை நாங்கள் 20.12.2021 அன்று சுவாதீனம் எடுத்துள்ளோம். நாங்கள் இதன் மூலம் தங்களுக்கு மேலும் தெரிவிப்பது யாதெனில், இதன் கீழ்க்குறிப்பிட்ட அசையா சொத்துக்கள் தங்களால் இதன் கீழ் குறிப்பிட்ட விபரங்களின் படியிலான மொத்த நிலுவைத்தொகையையும் செலுத்தி மீட்கப்படவில்லையெனில், **விற்பனை அறிவிப்பு தேதியிலிருந்து 15 நாட்கள் முடிவுற்ற பிறகு அதாவது 2022 மார்ச் 14 ம் தேதிக்கு பிறகு (பின்னிட்ட விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு) மின்னணு ஏலம் மூலம் 2022 மார்ச் 30 ம் தேதியன்று விற்பனை செய்திடுவோம்.**

சொத்துக்களின் விபரங்கள், அடிப்படை விலை,நிலுவைத்தொகை உள்ளிட்ட விபரங்களாவன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

லாட். எண்	சொத்துக்களின் விபரங்கள்	சுவாதீன தேதி	அடிப்படை விலை (ரூபாயில்)	விற்பனை அறிவிப்பு பிரசுர தேதி	மின்னணு ஏல தேதி	2022 பிப்ரவரி 28 ம் தேதியின் படி நிலுவைத் தொகை
1	**நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், எண். 2 சார் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுக்கா, கொண்டிசெட்டிப்பட்டி கிராமம், சர்வே எண். 25/4 ல்** அமையப்பெற்ற 0.44 ஏக்கர் மற்றும் சர்வே எண். 25/7ல் அமையப்பெற்ற 0.41 ஏக்கர் என மொத்தம் 0.85 ஏக்கர்., இதில் உள்ள 2750 சதுர அடி பரப்பளவு கொண்ட விவசாயமற்ற நிலம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இது பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் அமையப்பெற்றது. வருவாய் ஆவணத்தின் படி, மேற்சொன்ன இடமானது புதிய உட்பிரிவு சர்வே எண்கள். 25/4–A & 25/7 லும், பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்கள். 727/1994, 1687/1981 தற்றும் 1017/1980 ன் படி இவ்விடமானது நாமக்கல் தாலுக்கா, கொண்டிசெட்டிபட்டி கிராமம், சர்வே எண்கள். 25/4, 25/7 ல் 2750 சதுர அடி பரப்பளவுடன் ப்ளாட் எண்கள். 16 மற்றும் 17 யைக்கொண்டு அமைந்துள்ளது. 2750 சதுர அடி பரப்புக்கான எல்லைகளாவன – திரு. காளியண்ண கவுண்டர் மற்றும் பிறருக்கு சொந்தமான காலி இடம், திரு. ரங்கனின் காலி இடம் ஆகியவற்றுக்கு – வடக்கு, 20 அடி அகல கிழமேல் பொது சாலைக்கு – தெற்கு திரு. ரங்கசாமியின் காலி இடத்துக்கு – கிழக்கு, திரு. காளியண்ண கவுண்டர் மற்றும் பிறருக்கு சொந்தமான காலி இடம், 10 அடி அகல தென்வடல் பொது சாலைக்கு – வடக்கு. 2750 சதுர அடி பரப்புக்கான அளவீடுகளாவன – கிழமேல் வடபுறம் – 54 அடி., கிழமேல் தென்புறம் – 56 அடி., தென்வடல் கிழபுறம் – 50 அடி., தென்வடல் மேற்கு புறம் – 50 அடி., மற்றும் அதில் உள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் நிலத்துடன் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தற்போது அல்லது வருங்காலத்தில் அவ்வப்போது / அந்தந்த அடமான தேதிக்கு பிறகு அமைக்கப்பட்ட / அமைக்கப்படவுள்ள அனைத்து கட்டமைப்புக்கள் மற்றும் நிலத்துடன் இணைக்கப்பட்ட ஆலை மற்றும் இயந்திரங்கள் மற்றும் இச்சொத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து வழித்தட / மாமூல் உரிமைகள் ஆகியன.	08 / ஜனவரி / 2021	77,00,000/–	15 மார்ச் 2022 அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணியில்	30 மார்ச் 2022	28.02.2022 ம் தேதியின் படி, ரூ. 2,45,46,853/– (ரூபாய். இரண்டு கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து எட்நூற்று ஐம்பத்து மூன்று மட்டும்)

மேற்சொன்ன விதிகளில் விதி 8 மற்றும் 9 ன் கீழான ஏற்பாடுகளின் படி, மேற்சொன்ன நிலுவைத்தொகையை இந்த அறிவிப்பிலிருந்து (பின்னிட்ட விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு) 15 நாட்களுக்குள் திருப்பி செலுத்த இதன் மூலம் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / ஜாமீனளித்தவர்/கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / ஜாமீனளித்தவர்/கள் ஆகியோர் கடன்களை திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்"** மற்றும் **"திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில் (வில்லங்கங்கள் ஏதேனும்இருப்பின் அவற்றுடன்) மின்னணு ஏலம் மூலம் **2022 மார்ச் 30 ம் தேதியன்று விற்பனை செய்யப்படும்.**

பிணைக்காப்பு சட்டம் பிரிவு 13(8) ன் கீழ் கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / ஜாமீனளித்தவர்/கள் இதன் மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் மீதான விற்பனையை 2022 மார்ச் 30 ம் தேதியன்று இதன் மேற்குறிப்பிட்ட அடிப்படைவிலைக்கோ அல்லது அதற்கு அதிகமான விலைக்கோ உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பு மொத்த நிலுவைத்தொகையையும், பணம் செலுத்தும் தேதி வரையிலான வட்டி ஆகியோருடன் செலுத்தி மீட்டுக்கொள்ளலாம் என்பதை தயவு கூர்ந்து அறியவும்.

நன்றி,
அதிகாரப்பூர்வ அலுவலர்
கோட்டக் மஹிந்திரா பேங்க்
தேதி : 15 மார்ச் 2022